தமிழ் நாடு சட்டப் பேரவை

புதன்கிழமை, 1971 ஜூலை, 28.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர், திரு. பெ. சீனிவாசன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

District Educational Officers.

* 497 Q.—THIRU B. VENKATASWAMY : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state :

(*a*) whether there is any proposal to appoint one more District Educational Officer for Hosur Division in Dharmapuri district; and

(*b*) if so, when he will be appointed?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) இச்செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, considering the hilly and difficult nature of the Dharmapuri district, one District Educational Officer is not sufficient. Since the matter has been pending for a long time, may I request the Hon. Minister to provide one more District Educational Officer for the Dharmapuri district?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அந்த மாவட்டத்திற்கு ஒரு மாவட்டக் கல்வி அதிகாரி இருப்பதால் இன்னொரு மாவட்டக் கல்வி அதிகாரி போடவேண்டும் என்ற செயற்குறிப்பு அனுப்பப் பட்டிருக்கிறது. அது அரசாங்கத்தின் பரிசிலனையில் இருந்து வருகிறது. விரைவில் அதுபற்றி முடிவு எடுக்கப்படும்.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, தாலுக்காக்கள் அடிப்படையில், மூன்று தாலுக்காக்களுக்கு ஒரு மாவட்டக் கல்வி அதிகாரி என்ற முறையில் தான் இதற்கு முன்னால் அந்த அதிகாரிகள் நியமிக்கப்பட்டார்கள். இப்பொழுது புதிதாகச் சில தாலுக்காக்கள் பிரிக்கப்பட்டிருக்கின்றன. வடார்க்காடு மாவட்டத்தில் இரண்டு புதிய தாலுக்காக்கள் வந்திருக்கின்றன. இதை அடிப் படையாக வைத்து அதிகமாக வடார்க்காடு மாவட்டத்தில் மாவட்டக் கல்வி அதிகாரிகளைப் போடுவதற்கான செயற்குறிப்பு ஏதேனும் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அதிகமான அளவு மாவட்டக் கல்வி அதிகாரிகளைப் போடவேண்டும் என்று இருந்தாலும், நிதிப் பற்றாக்குறையையொட்டி, அதற்கான முயற்சிகள் மெல்ல மெல்லத்தான் மேற்கொள்ளப்படுகின்றன. தர்மபுரி மாவட்டத்தில் ஒரே ஒரு மாவட்டக் கல்வி அதிகாரி இருப்பதால் இன்னொரு மாவட்டக் கல்வி அதிகாரியைப் போட வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில்தான் இந்த வினா எழுப்பப் பட்டிருக்கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி: எல்லா மாவட்டங்களுக்கும் சீஃப் எஜுகேஷனல் ஆபீசர்கள் இருக்கிறார்கள். அப்படியிருக்கும்போது சேலம்-தருமபுரி இரண்டுக்கும் சேர்ந்து ஒரு சீஃப் எஜுகேஷனல் ஆபீசர் இருப்பதால் தாமதங்கள் ஏற்படுகின்றன. ஆகவே, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு சீஃப் எஜுகேஷனல் ஆபீசர் நியமிக்கப்படுவாரா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, பெரிய மாவட்டத்திற்குப் பக்கத்தில் இருக்கும் சிறிய மாவட்டத்தையும் சேர்த்து ஒரே மாவட்டத் தலைமைக் கல்வி அதிகாரி நியமிக்கப்பட்டிருக்கிறார். அந்த வகையில் தான் கோயம்புத்தூருக்கும், நீலகிரிக்கும் சேர்த்து ஒரு தலைமைக் கல்வி அதிகாரியும், திருநெல்வேலிக்கும், கன்னியாகுமரிக்கும் சேர்த்து ஒரு தலைமைக் கல்வி அதிகாரியும், சேலம், தருமபுரி இரண்டுக்கும் சேர்த்து ஒரு தலைமை கல்வி அதிகாரியும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். தருமபுரி மாவட்டத்திற்குத் தனித் தலைமைக் கல்வி அதிகாரி போடவேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக் கிறார்கள். அது இனிமேல் பரிசீலிக்கப்பட வேண்டிய ஒன்று.

*498 Q.—DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state:

(a) whether it is a fact that a number of posts of District Educational Officers and Chief Educational Officers have been kept vacant since October 1969; and

(b) if so, he details therefor?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கிடமில்லை.

திரு. எஸ். முருகையன்: வடார்க்காடு மாவட்டத்தில் நான்கு மாவட்டக் கல்வி அதிகாரிகள் இருக்கிறார்கள். அவர்களில் மூன்று பேர்கள் பெண்களாக இருக்கிறார்கள். பெண்களாக இருப்பதால் அவர்கள் பல பகுதிகளுக்கும் சென்று சுற்றிப்பார்க்க முடியாத நிலை இருக்கிறது. மாவட்டத்தில் ஒருவர் மட்டும் பெண் கல்வி அதிகாரியாக இருக்கலாம் என்று வைத்துவிட்டு, மற்ற மூவர் ஆண் அதிகாரிகளாக நியமிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, பணிகள் எப்படி இருக்கின்றன என்றுதான் பார்க்க வேண்டும். அவர்கள் ஆண்களா, பெண்களா என்று பார்க்க வேண்டிய அவசியம் இல்லை. மாவட்டக் கல்வி அதிகாரிப் பொறுப்பேற்றுக்கொண்டிருப்பவர்களுக்கு ஜீப் வழங்கப்பட்டிருக் கிறது. அவர்கள் ஆண்களாக இருந்தாலும் பெண்களாக இருந்தாலும் அவர்கள் பணிகளை சிறப்புச் செய்யலாம். மாவட்டத்திற்கு இத்தனை பேர் தான் பெண்கள், இத்தனை பேர்தான் ஆண்கள் என்று வரையறை செய்ய இயலாது.